<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | முனியப்பன் | நாள் | 19.01.2024 |
| தகப்பனார் பெயர் | மாரிமுத்து | | |

**<u>வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

8) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 ல் இறப்பு சான்றிதழ் குற்றவியல் நீதிமன்றத்தில் மனு செய்து, அதன் பேரில் பெறப்பட்டது என்றால், சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.6 ன் படி மாரியப்பன் என்பவர் கடந்த 25.09.1989 ம் தேதியில் இறந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள மாரியப்பன் என்பவர் என்னுடைய மூத்த சகோதரர் என்றுதான் நான் எதிர்வழக்காடுகிறேன் என்றால், சரிதான்.

9) கடந்த 01.04.2015 ம் தேதியில் சர்வே எண்கள்.252/11, 252/10, 252/5 ஆகியவற்றிலுள்ள நிலங்களை அளக்க நில அளவையருக்கு விண்ணப்பித்து அதற்கான கட்டணம் செலுத்தினோம் என்றால் சரிதான். மேற்படி தேதியில் என் சகோதரர் என நான் சொல்லும் மாரியப்பன் ரேகை வைத்து சலான் கட்டியதாக சலானில் உள்ளது என்றால், மேற்படி சலானை மாரியப்பன் கட்டவில்லை. நான் தான் கட்டினேன். மேற்படி ரேகை வைக்கும் இடத்தில் மாரியப்பன் என பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால், மாரியப்பன் பெயரில் சொத்து இருந்ததால் அவர் பெயர் எழுதப்பட்டுள்ளது.

10) என் பாட்டனார் பெயர் ராமசாமி கவுண்டர் என்றால் சரிதான். என் தந்தையின் பெயர் மாரிமுத்து கவுண்டர் என்றால் சரிதான். என் தந்தை மாரிமுத்து கவுண்டர் கடந்த 29.09.1976 ல் இறந்ததாக என் தந்தைக்கு 2007 ம் வருடத்தில் வாரிசு சான்றிதழ் வாங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழில் காவேரியம்மாள் என் தாயார், கோவிந்தம்மாள் என் சகோதரி, செங்கோட்டையன் என் அண்ணன்,

பூமாலை என் அக்கா, முனியப்பன் (சாட்சி), லட்சுமி என் சகோதரி ஆகியோரை வாரிசுகளாக காட்டி வாரிசு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

11) 2007 ம் வருடத்தில் என் தந்தையின் பெயருக்கு பெறப்பட்ட வாரிசு சான்றிதழில் நான் குறிப்பிடும் என் சகோதரர் மாரியப்பனின் பெயர் இல்லை என்றால், சரிதான். அப்போது அவர் இறந்துவிட்டதால் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை. நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு எனக்கு மாரியப்பன் என்ற ஒரு சகோதரரே இல்லாததால்தான் மேற்படி வாரிசு சான்றிதழில் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல.

12) நான் சொல்வதுபோல் எனக்கு மாரியப்பன் என்ற ஒரு சகோதரர் இருந்ததற்கான எவ்வித ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதனால்தான் கடந்த 16.03.2017 தேதியில் மேற்படி மாரியப்பன் பெயருக்கு வாரிசு சான்றிதழ் வழங்க வட்டாட்சியர் மறுத்துவிட்டார் என்றால், சரியல்ல. நான் மேற்படி வாட்டாட்சியரின் உத்தரவை அ.வ.எண்.107/2022 என்ற வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

( வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.